அக்.31ம் தேதிக்குள்

# ஆன்லைனில் தொழிற்சாலை உரிமத்தை புதுப்பிக்க வேண்டும்

**தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் தகவல்**

மதுரை, அக். 7: ஆன்லைனில் தொழிற்சாலை உரிமத்தை அக்.31க்குள் புதுப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மதுரை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் தமிழ்ச்செல்வன் வெளியிட்டுள்ள அறிக்கை:

மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள் 2027ம் ஆண்டிற்கான தொழிற்சாலைகள் உரிமத்தை வரும் அக்.31ம் தேதிக்குள் புதுப்பிக்க வேண்டும்.

இதற்காக அலுவலகத்திற்கு நேரில் வராமல் *https://dish.tn.gov.in* என்ற இணையதளம் மூலம் மட்டுமே உரிய கட்டணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டும். விண்ணப்பித்த உடனே புதுப்பிக்கப்பட்ட உரிமத்தை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். உரிம திருத்தம், உரிமம் மாற்றம் ஆகியவற்றிற்கு இணையவழி மூலம் உரிமக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

இதே போல் ஒப்பந்த தொழிலாளர் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஒப்பந்த தொழிலாளர் விதிகள் மற்றும் மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் சட்டம், தமிழ்நாடு விதிகளின் கீழான உரிமத்தையும் ஒப்பந்ததாரர்கள் இணைய வழி மூலம் உரிமக் கட்டணம் செலுத்தி தங்கள் உரிமத்தை புதுப்பித்துக் கொள்ளலாம். அக்.31க்கு பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்த வேண்டும். உரிய உரிமம் இன்றி செயல்படும் தொழிற்சாலைகள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட்டவையாகும். மேலும், இது தொடர்பான விபரங்களுக்கு இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், 23 பழைய அக்ரஹார தெரு, தல்லாகுளம், மதுரை-02 என்ற முகவரியிலோ அல்லது 0452-2530729 என்ற தொலைபேசிஎண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என கூறியுள்ளார்.